[1972 பிப்ரவரி 1

சென்னை—கன்னியாகுமரி நெடுஞ்சாலை

*** 241 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—கன்னியாகுமரி நெடுஞ்சாலைப் பணிகளின் ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டனவா ?

(இ) ஆம் எனில், சாலை அமைப்பு வேலைகள் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) & (இ) கிழக்கு கடற்கரை சாலை நேர்பாட்டில் சில வேலைகளைப் பொறுத்த வரையில் ஆய்வு வேலைகள் முடிவடைந்துள்ளன. இவ்வேலைகள், ஒப்பந்தங்கள் நிர்ணயிக்கப்பட்ட உடன் தொடங்கப்படும். மீத முள்ள வேலைகளுக்கான ஆய்வு வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, எற்கெனவே, காசி—கன்னியாகுமரி நேஷனல் ஹைவேஸ் நெ. 7, நீண்ட நெடுங் காலமாக ஒரு பத்தாண்டுக் காலமாக இருக்கிறது. மதுரை—கன்னியாகுமரி நெடுஞ்சாலை போடப்படும் என்று சொல்லப்பட்டு வருகிறது. இன்னும் சர்வேயில்தான் இருந்து வருகிறதா ? அல்லது குறிப்பிட்ட தேதிக்குள் முடிவடைந்து விடுமா ? மேலும் மெட்ராஸ்—கன்னியாகுமரி ஹைவேஸ் திட்டம் விரைவில் செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச்சாலை மிகமிக முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். நாம் இதைப்பற்றி பல தடவைகள் வற்புறுத்தி வருகிறோம். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கு 14 கோடி ரூபாய் செலவாகு மென்று முதலில் மதிப்பிடப்பட்டது. இதனால் அதிகமான அளவில் செலவாகுமென்பதால் இதை இரண்டாகப் பிரித்து அனுப்பினால் பரிசீலிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. யூனியன் மந்திரி வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் இரண்டாகப் பிரித்து அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். அப்படியே இரண்டு திட்டங்களாகப் பிரித்து, 8 கோடி ரூபாய், 6½ கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு திட்டங்களைப் போட்டு அனுப்பினோம். அதற்கும் இதுவரை எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. மாநில அரசாங்கத்தின் திட்டத்தின்படி கடனை வேண்டுமானால் தரலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். கடனைத் தாருங்கள் என்று நாங்கள் கேட்டோம். அதுவும் விரைவாக வந்து சேரவில்லை. பல தடவைகள் நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக வற்புறுத்தி வருகிறோம். ஆனால் மத்திய அரசாங்கம் இதில் போதுமான அளவு கவனம் செலுத்தி நிதி உதவி தரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் நமக்கு உதவியும் தரவில்லை, கடனை வழங்கப் போகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதை

1972 பிப்ரவரி 1]

உடனடியாக வழங்குவதற்கு மாதிரி, மாநிலங்களுக்குக் கொடுப்பது போல அளிப்பதற்கு, நம்முடைய அரசாங்கத்தினிடம் ஏதேனும் குறிப்பு இருக்கிறதா ? அதுமட்டும் அல்ல, இன்னும் நிறைய பாலங்கள் கட்டாமல் இருக்கின்றன. அதையாவது கட்டுவதற்கு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மிஸ்ஸிங் லிங்க்ஸ்—அதாவது விடுபட்ட பகுதிகளுக்காக சுமார் 172 லட்சம் ரூபாய் கொடுத்தது. நாம் குறிப்பிட்டபடி முழு திட்டம் நிறைவேற்ற முழு அளவு உதவி கிடைக்கவில்லை. கடனாகவாவது கொடுங்கள் என்று கேட்டோம். அதுவும் இன்னும் கிடைக்கவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சமீபத்தில் நெடுஞ்சாலைப் பணிகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பதற்கும், பல புது வேலைகள் செய்யப்படுவதற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? நெடுஞ்சாலைத் துறையில் தலைமைப் பொறியாளர் என்கிற புதிய பதவி உண்டாக்கப்பட்டுள்ளதா ? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நேஷனல் ஹைவேஸ் ஈஸ்ட் கோஸ்ட் திட்டம் வரவில்லை. மத்திய அரசாங்கம் 40 கோடி ரூபாய் நமக்கு ஒதுக்கியிருக்கிறது. அந்தத் தொகையைச் செலவழிக்க தனி பொறியாளரை நியமித்திருக்கிறது. நேஷனல் ஹைவேஸ் வேலைகளைக் கவனிக்க அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, நேஷனல் ஹைவேஸுக்காக தரப்படுவது போன்ற உதவியை கன்னியாகுமரி—சென்னை நெடுஞ்சாலைக்கும் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து மத்திய அரசை நாடும் செயற்குறிப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல தட்வை நாடியிருக்கிறது. இன்னும் நாடுவதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையிலே நேஷனல் ஹைவேஸுக்காக 40 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்தால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 40 கோடி ரூபாயை எந்த எந்த ரோடுகளுக்காக செலவிடுவதற்கு அரசாங்கம் எண்ணியிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நான் குறிப்பிட்டமாதிரி தேசிய நெடுஞ்சாலையை விசாலப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும்தான் செலவிடப்படும். எந்த, எந்த ரோடுகள் என்பது ஒரு நீண்ட பட்டியலாக இருக்கிறது என்பதால் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.